**தலைப்பு 219 – விளையாட்டுத் துறை அபிவிருத்தித் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் செயலகத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 219 – விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 30 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.1.3 |
| | | 2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை | 2.5 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.9 |
| | | 4. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.1.4 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவு மற்றும் வினியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளகச் சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம் முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப் படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத் தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.6 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்வில் குறைபாடுகள்<br>2. சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.2<br>2.2 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

**நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்காமை**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அபிவிருத்தி அடைந்த குறிக்கோள்கள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் மீது விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்கு நோக்கி நெருங்கும் போது குறிப்பிட்ட விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்காக அனைத்து தரப்பினரும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் தரவுகள் சேகரிக்கப்படும் செயன்முறையொன்று காணப்படவில்லை.

**2.1.2 செய்பணிகளை நிலைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பிராந்திய விளையாட்டு அபிவிருத்தி செய்தல்**

பிராந்திய விளையாட்டு அபிவிருத்தியின் கீழ் 200 கிராமிய விளையாட்டுத் திட்டங்கள் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 564 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2017 ஆண்டின் போது 54 கிராமிய விளையாட்டுத் திடல்கள் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 343 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 26 விளையாட்டுத் திடல்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 28 விளையாட்டுத் திடல்களின் வேலைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை. இதன் பிரகாரம் 146 விளையாட்டுத் திடல்கள் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு மீளாய்வண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு மைதானத் தொகுதி நிர்மாணித்தல்**

மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு மைதானத் தொகுதிகள் நிர்மாணிப்பதன் கீழ் 13 மற்றும் மாகாண விளையாட்டு மைதானத் தொகுதிகள் 5 நிர்மாணிப்பதற்காகவும் ரூபா 1000 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரியினால் ரூபா 300 மில்லியன் மேலதிக ஏற்பாடுகளும் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது 13 மாவட்ட விளையாட்டு மைதான தொகுதிகள் மற்றும் 07 மாகாண விளையாட்டு மைதானத் தொகுதிகளின் நிர்மாணவேலை ஆரம்பிக்கப்பட்டு அவற்றிற்காக ரூபா 941 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் 5 மாவட்ட விளையாட்டு மைதான தொகுதிகள் மற்றும் 3 மாகாண விளையாட்டு மைதானத் தொகுதிகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மீதியான மாவட்ட விளையாட்டு மைதான தொகுதிகள் 8 மற்றும் மாகாண விளையாட்டு மைதான தொகுதிகள் 4 என்பனவற்றின் வேலைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

**2.1.3 பெறுகை செயன்முறையினை செயற்படுத்துதல்**

பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.1 இன் பிரகாரம் விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்வில்லை.

**2.1.4 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

திணைக்களத்தினால் கூட்டுத்தொகை ரூபா 663.35 இற்கான ஏற்பாடுகள் மீது ஆரம்பிப்பதற்காக திட்டமிட்டிருந்த 24 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 163.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 500.1 மில்லியன் அதாவது ஒதுக்கீடு ஏற்பாடுகளில் 75 சதவீதம் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தில் 2018 ஆண்டில் பூர்த்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்த 23 செயற்திட்டங்கள் காணப்படாமையால் 2017 ஆண்டிற்கான மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தில் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் 3.2.6 பந்தியின் பிரகாரம் 2018 ஜுன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் திணைக்களத்தின் 03 பிரிவுகள் மற்றும் 11 மாவட்ட அலுவலகங்களின் பண்டக் கணிப்பீடு 2018 ஆகஸ்ட் 27 திகதி வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆண்டிற்கான கணிப்பீட்டு சபை அறிவித்தல்களின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விதப்புரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 752(4) மற்றும் 770 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற சொத்துக்கள்**

2016 திசெம்பர் 23 திகதி களஞ்சியத்திற்கு ஒப்படைத்திருந்த ரூபா 12,995,000 தொகை பெறுமதியான பாரம் தூக்கும் இலத்திரனியல் தீர்மானிக்கும் சமிக்ஞை உபகரணம் 2008 செப்தெம்பர் 14 திகதி அளவிலும் பயன்படுத்தியிருக்கவில்லை.

**(இ) வெளித் தரப்பினருக்குக் கொடுத்துள்ள சொத்துக்கள்**

திணைக்களத்திற்கு சொந்தமான மோட்டார் கார் வண்டி ஒன்று விளையாட்டுத் துறை அமைச்சிற்கு விடுக்கப்பட்டிருந்தது.

**(ஈ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறைசாரா விதமாக பயன்படுத்துதல்**

வேறு நிறுவனங்களுக்கு சொந்தமாக காணப்பட்ட சில சொத்துக்கள் முறையான அங்கீகாரம் இன்றி திணைக்களத்தினால் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பம் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. விவரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்கள் வகை | சொத்துக்கள் உரித்தாக்கி இருந்த நிறுவனம் |
|---|---|
| பெலியத்த விளையாட்டுத் திடல் | பெலிஅத்த பிரதேச சபை |
| 2 கார் வண்டிகள் | விளையாட்டுத் துறை அமைச்சு |
| ஜீப் வண்டி ஒன்று | விளையாட்டுத் துறை அமைச்சு |

## 2.3 ஈடுபாட்டு பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஏற்பாடுகளை மிகைத்துள்ள பொறுப்புக்கள்**

05 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 135.25 மில்லியன் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 9.95 மில்லியன் இற்கான பொறுப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இந்தியாவில் குஜராத் என்ற இடத்தில் 2016 பெப்ரவரி 12 திகதி நடைபெற்ற தெற்காசிய போட்டிக்காக விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவுக்காக வழங்கியிருந்த தொகையில் மீதியாகிய ரூபா 6,878,916 தொகை 2018 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரை திணைக்களத்திற்கு வழங்கியிருக்கவில்லை.

## 2.5 செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 498 | 304 | 194 | 39 |
| | மூலதன | 1,457 | 1,260 | 197 | 13 |
| | **மொத்தம்** | **1,955** | **1,564** | **391** | **20** |
| 2014 | மீண்டுவரும் | 511 | 411 | 100 | 19 |
| | மூலதன | 1,743 | 1,133 | 610 | 35 |
| | **மொத்தம்** | **2,254** | **1,544** | **710** | **31** |
| 2015 | மீண்டுவரும் | 587 | 535 | 52 | 9 |
| | மூலதன | 2,213 | 1,775 | 438 | 20 |
| | **மொத்தம்** | **2,800** | **2,310** | **490** | **17** |
| 2016 | மீண்டுவரும் | 727 | 707 | 20 | 3 |
| | மூலதன | 2,084 | 1,306 | 778 | 37 |
| | **மொத்தம்** | **2,811** | **2,013** | **798** | **28** |
| 2017 | மீண்டுவரும் | 1,040 | 909 | 131 | 13 |
| | மூலதன | 2,345 | 1,577 | 768 | 33 |
| | **மொத்தம்** | **3,385** | **2,486** | **899** | **26** |

### (அ) பாதீட்டு மதிப்பீடுகள் தயாரித்தல்

விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையான ஏற்பாடுகளை ஒதுக்குவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த

பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்காமையால் பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன.

(i) ரூபா 3,385.89 மில்லியன் தொகையான மொத்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 899.05 மில்லியன் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அவை தேறிய ஏற்பாடுகளில் 26.5 சதவீதமாகும். இந்த மீதியான ஏற்பாடுகளில் ரூபா 768.17 மில்லியன் மூலதன ஏற்பாடுகளாகக் காணப்பட்டது. அவை மொத்த மூலதன ஏற்பாடுகளில் 22.7 சதவீதமாகும்.

(ii) 09 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயங்களுக்கான தேறிய ஏற்பாடுகளில் 23 சதவீதம் முதல் 77 வரை வீச்சினை கொண்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**கணக்குகள் தயாரிப்பதில் வழுக்கள்**

வங்கி இணக்கக் கூற்றுக்களில் இனங்காணப்படாத வரவு என காட்டப்பட்டிருந்த 2016 ஆண்டில் நடைபெற்ற 12 ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட இடைநேர் மற்றும இணைந்த படிகள் ரூபா 4,811,042 தொகை மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் வேறு மீண்டுவரும் செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

**(இ) காணாமல் போயுள்ள உறுதிச் சான்றுகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் DGSA-10 படிவத்தில் காணாமல் போயுள்ள உறுதிச் சான்றுகள் தொடர்பாக கூற்றில் காணாமல் போன உறுதிச் சான்று ‘‘இல்லை’’ என அறிவித்திருந்த போதிலும் கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் பரிசோதனையின் போது ரூபா 7,386,902 தொகை பெறுமதியான 48 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21901 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12 | 12 | 7 | 8 | 34 | 33 |

**நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளாவறு இறந்த, ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 243,980 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதிகளில் ரூபா 242,280 இற்கான மீதியொன்று 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரை காலவீச்சு முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதுள்ளது.

**2.7 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் காணப்படும் பொது வைப்புக் கணக்கில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 220 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் 2 வருடங்களை மிகைத்துள்ள 11 வைப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 13,306,587 தொகை தொடர்பாக நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.8 வங்கிக் கணக்குச் செயற்படுத்துதல்**

**சீராக்கல் செய்ய வேண்டிய மீதிகள்**

சமர்ப்பிக்கப்பட்டு வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கியினால் நேரடியாக கொடுப்பனவு என காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 221,770 தொகை பெறுமதியான 05 பதிவுகள் தொடர்பாக அதனது சரியான தன்மையை கண்டறிந்து தேவையான சீராக்கல் செய்வதற்கு 2018 ஏப்ரல் 18 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பொறுப்புக்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 211 | பேணப்பட்டிருந்த போதிலும் சரியான தகவல்கள் உட்படுத்தியிருக்கவில்லை. |

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணங்கள் 134(2) இன் பிரகாரம் நிதி அலுவல்கள் தொடர்புடைய தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தில் அடங்கியுள்ள 12 கருமங்களில் 07 மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூலதனச் செலவுகள், விளையாட்டு மைதானத் தொகுதி நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல், விளையாட்டுத்துறை நூதனசாலை நிர்மாணித்தல் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம் ஆகிய செயற்திட்டங்களில் கணக்காய்வு விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.11 மனித வள முகாமைத்துவம்**

**2.11.1 இணைக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகைப் பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 123 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்குரிய செலவு ரூபா 438,199 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 10 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 23 | 18 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 249 | 164 | 85 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 104 | 89 | 17 | 02 |
| | மொத்தம் | 391 | 281 | 112 | 02 |